மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணிலா, உளுந்து, பச்சைப்பயறு விதைகள் தக்க பருவத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு காலகட்டங்களிலே, காலத்தைக் கடந்து, அந்தப் பருவத்திலே வழங்கப்படாமல், அதுவும் நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற மேட்டுத் தாவரப் பயிர்களுக்கான விதைகளையெல்லாம் காலம் கடந்து கொடுப்பதனால், அது சரியாக விவசாயிகளுக்குச் சென்றடையாமல், அதனுடைய பலனை முழுமையாக விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. இதனால் ஏழையெளிய விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை அரசு க்ருணையோடு கூர்மையாக பரிசீலிக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து நல்ல கருத்து. அப்படி ஏதாவது நடந்திருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், அதற்குரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 103, திரு. அ. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

103—

வேளாண் விற்பனைக் குழு அலுவலகம்

***10997—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் வேளாண் விற்பனைக் குழு அலுவலகத்தை மங்கநல்லூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2002 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பின்வாய் தேரையான தமிழகத்தை மீட்டு, மீண்டும் அதை தலைசிறந்த மாநிலமாக்கிட மீண்டும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதல்வராக்க வாக்களித்த ஆண்டிப்பட்டி மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிரிகள் சிறைச்சாலைக்குச் செல்லும் காலத்தை தாங்களே நிர்ணயித்து, அஞ்சி நடுங்கச் செய்த இந்தியாவின் இரும்புத் தலைவியின் மலர்ப் பாதங்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், குத்தாலம் தொகுதியில் மங்கநல்லூர் கிராமம் 25 ஊராட்சிகளுக்கு நடுவே அமைந்துள்ளது. அங்குள்ள விவசாயிகளுடைய விளை பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்த நிலைமையைப் போக்க புரட்சித் தலைவி அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து தஞ்சாவூர் வேளாண்மை விற்பனைக் குழு ஒன்று மட்டுமே செயல்படுகிறது. நாகை மாவட்டத்திற்கென்று தனியாக வேளாண்மை விற்பனைக் குழு அமைக்கும் திட்டம் புரட்சித் தலைவி அரசில் உள்ளதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நெருக்கடி, தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு மங்கநல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, மயிலாடுதுறை தாலுகாவிலுள்ள மங்கநல்லூர் என்னும் இடத்தில் பயிராகும் பருத்தி மற்றும் இதர விளைபொருட்களின் விற்பனைக்கு ஏதுவாக ஒரு துணை விற்பனைக் கூடத்தை ஆரம்பித்து, அதனுடைய செயலாக்கத்தின் அடிப்படையில், தேவைப்படின், ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்திட அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 105, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

105—

பேருந்து

***3047—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சில்லாம்பட்டி, புதுப்பட்டி, பசுக்காரன்பட்டி, காமாட்சிபுரம், அய்யனார்குளம், விக்கிரமங்கலம், சோழவந்தான் வழியாக வாடிப்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சில்லாம்பட்டி, புதுப்பட்டி, பசுக்காரன்பட்டி, காமாட்சிபுரம், அய்யனார்குளம், விக்கிரமங்கலம், சோழவந்தான் வழியாக வாடிப்பட்டிக்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளதால் மேற்கொண்டு கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இந்தப் பகுதிக்கு பகுதி பகுதியாக பேருந்து விடப்படுகிறது என்று கூறினார்கள். அந்த இடத்திற்கு, நான் குறிப்பிட்ட உசிலம்பட்டியிலிருந்து பகுதி பகுதியாகச் செல்கின்ற பேருந்திலே ஏறி வாடிப்பட்டி அடைய வேண்டுமென்று சொன்னால் 5,6 பேருந்துகள் மாற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்கள் எல்லாம் வாடிப்பட்டிக்குச் சென்றுவிட்டால் அங்கு இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையிலிருந்து திண்டுக்கல், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, திருப்பூர், பழனி போன்ற பகுதிகளுக்கும் செல்வதற்கு வாய்ப்பாக வாடிப்பட்டியில்